# 19 வது பெருநகர குற்றவியல் நீதிமன்றம்,
# எழும்பூர் @ அல்லிக்குளம், சென்னை – 3.

தேதி 27.09.2024.

| | | |
|---|---|---|
| பட்டியல் வழக்கு எண். | – | 3424/2018 |
| வாதி/எதிரி/நீதிமன்ற தரப்பு | – | எ.த.சா. 1 |
| பெயர் | – | மோகனன் |
| தந்தை பெயர் | – | மாதவன் நாயர் |
| முகவரி | – | தேக்கில் ஹவுஸ், திருவள்ளூர், வடகர, கேரளா–673 541 |
| வயது | – | 76 |

1873–ம் வருடத்திய இந்திய சாட்சிய சட்டம் 10–வது வகையங்கள்படி இன்று 27.09.2024 என்னால் உறுதிமொழி கூறப்பட்டு சாட்சியம் அளிக்கப்படுகிறது. சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

<u>குறுக்கு விசாரணை</u>

நான் மேற்படி கம்பெனியின் மானேஜிங் டைரக்டராக இருப்பது குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி வழக்கில் விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். மேற்படி எனது நிறுவனம் இன்கிராப்ட் கார்ப்பரேட் நிறுவனமாக 1994–ஆம் ஆண்டு ஆகும். நான் மேற்படி நிறுவனத்தின் இயக்குநராக 1994–ஆம் ஆண்டு பொறுப்பேற்றேன். மேற்படி நாங்கள் ராமலிங்க ஐயர் ஏஜென்சியில் வரவு செலவு வைத்திருந்தோம் புகார்தாரரிடம் இல்லை. அதேபோல என்ன வகையான வியாபாரம் நடந்தது என்று சொன்னால் பேப்பர் சம்மந்தமாக நடந்தது. யார் மூலமாக பொருட்கள் வாங்கப்பட்டது என்று சொன்னால் ராமலிங்கஐயர் ஏஜென்சி மூலமாக ஆனால் இன்வாய்ஸ் யார் பேரில் கொடுக்கப்பட்டது என்று சொன்னால் டிஎன்பிஎல் மூலமாக இருக்கலாம். மேற்படி வரவு செலவில் ராமலிங்கஐயர் ஏஜென்சி தொகை இருப்பது என்றால் சுமார் ரூ 26 லட்சம் இருக்கலாம். ஏதாவது பொருட்கள் வாங்கியிருக்கும் ஆவணங்கள் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி பொருட்கள் இடைத்தரகர் ராமலிங்க ஐயர் ஏஜென்சி மூலமாக தரப்பட்டது. இடைத்தரகர் மூலமாகத்தான் பொருட்கள் வாங்கியதற்கு பிரதான ஆவணங்கள் இருக்கிறதா என்றால் இல்லை. காசோலையில்

உள்ள கையெழுத்து யாருடையது என்றால் என்னுடையது தான் அது 1994–ல் கொடுக்கப்பட்டது. ஆவணங்கள் என்னுடையதுதான். ஏதாவது ஆவணம் 1994–ல் இந்த காசோலை கொடுக்கப்பட்டதற்கு ஆவணங்கள் என்றால் இல்லை. ஆனால் நான் 23.02.2000 நான் எனது மேனேஜிங் டைரக்டர் பதவியை ராஜினாமா செய்து விட்டேன். நான் கொடுத்த காசோலையை திரும்ப பெறுவதற்கு கடிதம் கொடுத்தீர்களா என்றால் கொடுத்தேன். மேலும், மேற்படி காசோலையில் டைரக்டர் பைனான்ஸ் என்று உள்ளது ஆனால் மேனேஜிங் டைரக்டராக 27.07.1995ல் ஆகிவிட்டேன் அதனால் நான் மேற்படி காசோலையை சம்மந்தப்பட்ட வங்கிக்கு ஸடாப்பேமன்ட் கொடுத்திருக்கீர்களா என்றால் கொடுத்திருந்தேன் அதற்கான ஆவணங்கள் எதுவும் இருக்கிறதா என்றால் இல்லை. அது 20 வருடத்திற்கு மேலாகிவிட்டது. மேற்படி இவ்வழக்கில் சட்ட அறிவிப்பு எப்போது பெற்றிருக்கிறீர்கள் என்றால் நான் அறிவிப்பு தரவில்லை. எங்களுடைய தனியார் நிறுவனம் பொது நிறுவனம் ஆக்கப்பட்டதற்கு புகார்தாரர்க்கு தகவல் தெரிவித்தீர்களா என்றால் நான் ஒவ்வொரு நிறுவனத்திற்கும் தகவல் தெரிவிக்கப்பட்டது. அது சம்மந்தமாக ஆவணம் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை.

(குறுக்கு விசாரணை வாய்தா தேதி ஒத்திவைக்கப்படுகிறது)